*பிரசங்கம் 11*

# [அந்நிய] மொழிகளில் பேசுதல் பற்றிய விஷயம் என்ன?

## (1 கொரிந்தியர் 14)

*1 கொரிந்தியர் 14ம் அதிகாரத்தில், அற்புத வரங்களின் பயன்பாடு தொடர்பான பெருமளவு சந்தர்ப்பப் பொருளுக்குள் பவுல் - அந்நிய மொழிகளில் பேசுதல் என்ற - பரிசுத்த ஆவியானவரின் குறிப்பிட்ட வரம் ஒன்றைப் பயன்படுத்துதலில் உள்ள பிரச்சனைகள் மீது கவனம் குவித்தார்.*

*இன்றைய நாட்களில் கிறிஸ்தவக் குழுவினரில் சிலர் அந்நிய மொழிகளில் பேசுவதாக உரிமை கோருகின்றனர். இந்த நடைமுறை (நமது வசனப்பகுதியில் உள்ளபடி glōssa "மொழிகள்" என்பதில் இருந்து வருகிற) "glossolalia" என்று அழைக்கப்படுகிறது. 1970களில் இருந்து, மொழிகளில் பேசுதல் மற்றும் குணமாக்குதல் போன்ற பிற அற்புத வரங்களின் மீது புதுப்பிக்கப்பட்ட வலியுறுத்தம் ஒன்று இருந்து வருகிறது. "தெய்வீக எழுப்புதல் இயக்கம்"[1] ஒன்று எழும்பி, பிரதான நாமகரணக் கூட்டங்கள் பலவற்றைப் பாதித்துள்ளது. உண்மையில் தெய்வீக எழுப்புதல் இயக்கம், கிறிஸ்தவத்தின் "மூன்றாவது அலை" என்று அழைக்கப்பட்டுள்ளது. (கத்தோலிக்கம் "முதலாவது அலையாகவும்" புரொட்டஸ்டன்டு இயக்கம் "இரண்டாவது அலையாகவும்" இருந்தது.) கிறிஸ்தவத்தில் இவ்வளவு பிரபலமாகும் எந்த விஷயத்தையும், அது வேதவசனத்தின் படியானதா என்று நாம் ஆராய்வது அவசியமாக உள்ளது.*

*தெய்வீக எழுப்புதல் குழுக்களில் உறுப்பினர்களாவதற்காக, சிலர் கர்த்தருடைய சபையைக்கூட விட்டுச் சென்றுள்ளனர். கிறிஸ்துவின் சபை மிகவும் "பகுத்தறிவதாக" உள்ளது என்பது அவர்களின் கண்ணோட்டமாக இருக்கிறது. ஆவியானவருடைய வரங்களை மறுப்பதன் மூலம் சபையானது, கிறிஸ்தவ மார்க்கத்தை செத்துப் போனதாக்கவும், இருதயம், ஆத்துமா, உணர்வு அல்லது பற்றார்வம் எதுவுமற்ற சட்டப்பூர்வ முறைமையாக்கவும் அனுமதித்துள்ளது என்று அவர்கள் நினைக்கின்றனர். மேலும் அவர்கள், சபையானது புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தை மீளக்கட்டுவதாக உரிமைகோரிக் கொண்டாலும், முதல் நூற்றாண்டு சபையின் வாழ்வில் மிகவும் அதிகமான பாகமாக இருந்த சிலவற்றை அது [கிறிஸ்துவின் சபை] புறக்கணித்துள்ளது என்றும் நம்புகின்றனர்.*

*அவர்கள் கூறுவது சரிதானா? அந்நிய மொழிகளில் பேசுதல் பற்றிய சத்தியங்களைக் கற்றுக் கொள்வதற்கு நாம், வேதவசனங்களை ஜாக்கிரதையாகப் படித்தல் அவசியமாக உள்ளது.*

## உண்மைகள் யாவை?

**முன்பே கற்றிராத [அந்நிய] மொழிகளில் பேசுதல் முதல் நூற்றாண்டில் நடைமுறையில் இருந்தது**

*[அந்நிய] மொழிகளில் பேசுதல் என்பது முதல் நூற்றாண்டு சபையில் நடைமுறையில் இருந்தது என்பது நிச்சயம். பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள், ஆவியானவர் "தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே" (நடபடிகள் 2:4; KJV) அந்நிய மொழிகளில் பேசினர். பேதுரு, கொர்நேலியுவுக்கும் அவரது வீட்டாருக்கும் பிரசங்கித்த பின்பு, அவர்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு, அவர்கள் மீது பரிசுத்த ஆவியாவர் இறங்கி வந்தார் மற்றும் அவர்கள் [அந்நிய] மொழிகளில் பேசினர் (நடபடிகள் 10). பவுல் எபேசு நகருக்குச் சென்றபோது, அங்கு யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்திருந்த சீஷர்கள் சிலரை அவர் கண்டார். வேத வசனத்தின்படி அவர்கள் ஞானஸ்நானம் பெற்ற போது, அவர்கள் [அந்நிய] மொழிகளில் பேசினர் (நடபடிகள் 19). [அந்நிய] மொழிகளில் பேசுதலின் வரம் 1 கொரிந்தியர் நிருபத்தில் அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்விளைவாக, புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் குறைந்த பட்சம் சில கிறிஸ்தவர்களாவது அந்நிய மொழிகளில் பேசினர் என்பதில் சந்தேகம் இல்லை.*

**இன்றைய நாட்களில் செயல்படுத்தப்படும் "[அந்நிய] மொழிகளில் பேசுவதாக" கூறப்படும் விஷயம்**

*அதுபோன்றே, இன்றைய நாட்களில் "அந்நிய மொழிகளில்" பேசுவதாக உரிமைகோரப்பட்டு செயல்படுத்தப்படும் விஷயம் ஆவிக்குரிய வகையில் பயன்நிறைந்ததாக அதைச் செய்பவர்களால் கூறப்படுகிறது. [அந்நிய] மொழிகளில் பேசுபவர்கள் இந்தப் பயிற்சியில் ஈடுபடும்போது, உணர்வுப் பூர்வமான எழுச்சி நிலை அல்லது ஆவிக்குரிய வகையில் எழுச்சி நிலையை உணருகின்றனர் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்கள் இந்த அனுபவத்தின் காரணமாக, தாங்கள் தேவனிடம் மிகநெருக்கமாக இருப்பதாக உணரலாம். அவர்கள் உணர்ந்துள்ளது பயனற்றதாக உள்ளது என்று அந்த தனி நபர்களிடம் கூறுவதோ அல்லது அவர்கள் அனுபவித்துள்ளதாக நம்புபவற்றின்மீது விவாதம் செய்வதோ நமது வேலையல்ல; இருப்பினும் அவர்களுடன் நாம் வேதாகம ரீதியான உண்மைகளைப் படிக்க முடியும்.*

*இவ்வேளையில் இன்றைய நாட்களில் [அந்நிய] மொழிகளில் பேசுதல் பற்றிய இரண்டு அடிப்படைக் கேள்விகளை ஆய்வு செய்வதே நமது அணுகுமுறையாக இருக்கும்.*

## அந்தக் கேள்விகள் யாவை?

**இன்றைய நாட்களில் "[அந்நிய] மொழிகளில் பேசுதல்" என்பது முதல் நூற்றாண்டு சபையில் செயல்படுத்தப்பட்ட அதே வரமா?**

*கற்றறியாத அந்நிய மொழிகள் அல்ல.* இன்றைய நாட்களில் [அந்நிய] மொழிகளில் பேசுபவர்கள், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலங்களில் செய்யப்பட்ட அதே செயலைச் செய்வதில்லை. [அந்நிய] மொழிகளில்

பேசும் வரம்பெற்றிருந்த முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள், அறியப்பட்ட மொழிகளில் பேசினர். உண்மையில் "மொழி" என்ற வார்த்தை ஒரு "பாஷையை" அர்த்தப்படுத்தவே பயன்பட்டது. நடபடிகள் 2:4ம் வசனம், அப்போஸ்தலர்கள் "ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்" என்று கூறுகிறது. 6ம் வசனத்தின்படி, கூட்டத்தில் இருந்த மக்கள், "தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள்." பலவகை பாஷைகளைப் பேசக்கூடிய மக்கள் அந்தக் கூட்டத்தில் இருந்தனர் (வசனங்கள் 9-11). பேசினவர்கள் கலிலேயர்களாக இருந்தபோதிலும், கூட்டத்தில் இருந்த ஒவ்வொரு நபரும் "அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே" அவர்கள் பேசியதைக் கண்டு அதிசயித்தனர் (2:7, 8).[2]

பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள் பிரசங்கித்ததைக் கேட்டவர்களால் புரிந்து கொள்ளப்பட்ட மொழிகளில் அவர்கள் [அப்போஸ்தலர்கள்] பேசினர் என்பதில் நாம் சந்தேகப்பட முடியாது.[3] அந்த மற்ற பாஷைகளில் அவர்கள் பேசுவதற்கான திறமை அற்புதம் என்பதாக இருந்தது, ஏனெனில் அவர்கள் அந்த வட்டார பாஷைகளை ஒருக்காலும் படித்து அறிந்திருந்ததில்லை மற்றும் அவற்றை அவர்கள் அறிந்திருக்கும்படி எதிர்பார்க்க இயலாதிருந்தது. இதற்கு நேர்மாறாக இன்றைய நாட்களில், பாஷைகளில் பேசுதல் என்பது அர்த்தமற்ற வார்த்தைகளைப் பிதற்றுதலாக உள்ளது. சட்டப்படி, பாஷைகளில் பேசுபவர்கள் அறியப்பட்ட மனித பாஷைகளில் பேசுவதாகக்கூட உரிமை கோருவதில்லை.

பாஷைகளில் பேசுவதாக நம்புகிறவர்கள், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் செய்யப்பட்டதையே தாங்களும் *செய்வதாக* உரிமை கோருகின்றனர். மொழிகளில் பேசுதல் என்பது அறியப்பட்ட மொழிகளில் பேசுதலை உள்ளடக்குவதில்லை என்று நிரூபிக்க அவர்கள் 1 கொரிந்தியர் 14ஐப் பயன்படுத்துகின்றனர். உண்மையில் அந்த அதிகாரத்தில் பல வசனங்கள், மொழிகளில் பேசுதல் என்பது பேசுபவருக்கோ அல்லது கேட்பவருக்கோ தெரிந்திராத மொழிகளில் பேசுதலை உள்ளடக்குவதாகக் காணப்படுகிறது:

> ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான் (14:2).
>
> அந்நியபாஷையில் பேசுகிறவன், தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான் (14:4).
>
> என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம்பண்ணினால், என் ஆவி விண்ணப்பம்பண்ணுமேயன்றி. என் கருத்து பயனற்றதாயிருக்கும் (14:14).
>
> ஆகையால், சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து, எல்லாரும் அந்நிய பாஷைகளிலே பேசிக்கொள்ளும்போது, கல்லாதவர்களாவது, அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால், அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்களல்லவா? (14:23).

இந்த அதிகாரத்தின் மேற்கண்ட வசனங்கள் மற்றும் பிற வசனங்களில் இருந்து இரண்டு உண்மைகள் தெளிவாகின்றன: (1) சில கிறிஸ்தவர்கள் பேசிய மொழிகள் - குறைந்த பட்சம் அவர்களால் - அறியப்படாதவைகளாக இருந்தன, ஏனெனில் வியாக்கியானம் பண்ணுதல் என்ற வரமானது மொழிகளில் பேசுதலின் வரத்தில் இருந்து வித்தியாசப் பட்டிருந்தது (14:13). ஒருவர் மொழிகளில் பேசும்போது, அவர் தாம் பேசுவது என்ன என்று அறிந்திருக்க அவசியம் இல்லை. (2) ஒரு நபர் அந்நிய மொழியில் பேசும்போது, தாம் பேசுவது இன்னதென்று அவர் புரிந்து கொள்ளாமல் இருந்தாலும், அந்த வரத்தை அவர் தனிப்பட்ட வகையில் செயல்படுத்தும்போது அவர் தனிப்பட்ட வகையில் பயன் அடைந்தார் (14:4).

மொழிகளில் பேசிய கொரிந்தியர்கள், அறியப்பட்ட மனித மொழிகளைத் தவிர மற்ற சிலவற்றை பயன்படுத்தினர் என்று இவ்வசனங்கள் கருத்துத் தெரிவிக்கையில், அவர்கள் செயல்படுத்திய வரமானது நடபடிகள் 2ல் விவரிக்கப்பட்ட அதே வரமாக இருந்தது என்று நாம் யூகித்தாலும், இவை [இவ்வசனங்கள்] கருத்தை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக ஒரு நபர் ஜெர்மன் மொழியை ஒருக்காலும் படித்திராமல் இருந்தாலும், ஜெர்மன் மொழியைப் பேசும் வரம் அவருக்கு அளிக்கப்பட்டு. ஜெர்மானியர்கள் இராத ஒரு சபைகூடுகையில் அதை அவர் பேசினால், அவர் தாம் பக்திவிருத்தி அடைந்ததாக உணரலாம். பேசுபவரின் வார்த்தைகளைத் தேவன் புரிந்துகொள்வார் என்பது உறுதி, எனவே அவர் தேவனிடம் பேசுவார். இருப்பினும், அந்த சூழ்நிலைகளில் அவர் பேசுவதில் இருந்து வேறு எவரும் பயனடைய மாட்டார். மற்றும், சபையின் வெவ்வேறு உறுப்பினர்கள் - அவர்கள் தங்களுக்கும் தங்கள் உரையைக் கேட்பவர்களுக்கும் தெரிந்திராத - வெவ்வேறு மனித மொழிகளில் பேசக்கூடும் என்றால் மற்றும் அவர்கள் எல்லாரும் ஒரே வேளையில் அவ்வாறு பேசினார்கள் என்றால், பார்வையாளராக வரும் ஒருவர், அவர்கள் எல்லாரும் பைத்தியம் பிடித்தவர்கள் என்று நினைப்பாரே!

*அவிசுவாசிகளுக்குப் போதிப்பதற்காக அல்ல.* இன்றைய நாட்களில் மொழிகளில் பேசுதலை முதல் நூற்றாண்டு வரத்துடன் ஒப்பிடுதலில், தொடக்ககால சபையில் இருந்த இந்த அற்புதமான திறமையானது அவிசுவாசிகளை மனமாற்றுதலை நோக்கங் கொண்டிருந்தது என்பது முக்கியமான தீர்மானிக்கும் காரணியாக உள்ளது. 1 கொரிந்தியர் 14:22ம் வசனம், "அப்படியிருக்க, அந்நியபாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது; தீர்க்கதரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது" என்று கூறுகிறது. பிதற்றலாகப் பேசுதல் என்பது ஏற்கனவே விசுவாசிகளாக இருப்பவர்களுக்கு மன எழுச்சி ஊட்டுவதாக அல்லது பக்திவிருத்தி ஊட்டுவதாக இருந்தாலும், அது அவிசுவாசிகளுக்குப் போதிப்பதாக இருக்க முடியாது. இதற்கு நேர்மாறாக, படித்திராமல் இன்னொரு மொழியில் பேசும் திறன் என்பது அவிசுவாசிகளின் மனம் ஈர்ப்பதாக மாத்திரம் இருப்பதில்லை; ஆனால் மாறுபட்ட பின்னணிகளில் இருந்து வந்த மக்களிடத்தில் கிறிஸ்தவர்கள் செய்தித்தொடர்பு கொள்ளச் செய்ததினால் அது சுவிசேஷ ஊழியத்தை முன்னோக்கி எடுத்துச்செல்லவும் செய்தது (நடபடிகள் 2:4-12). 1 கொரிந்தியர் 14ஐ நாம் நடபடிகள் 2ன் வெளிச்சத்தில் விளக்கப்படுத்த வேண்டும்

மற்றும் பிரசங்கித்தலில் உதவும்படி, கொரிந்தியர்களில் சிலருக்குத் தேவன் கொடுத்திருந்த, மொழிகளில் பேசும் வரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டது என்று யூகிக்க வேண்டும்.

*அதே வழியில் நடைமுறைப்படுத்தப்பட வில்லை.* இத்துடன் கூடுதலாக, இன்றைய நாட்களில் மொழிகளில் பேசுபவர்கள் தங்கள் வரங்களை, முதல் நூற்றாண்டில் அவை பயன்படுத்தப்பட்டது போன்று (அல்லது அவை பயன்படுத்தப்பட வேண்டியது போன்றாவது) பயன்படுத்துவது இல்லை. மொழிகளில் பேசியவர்கள் அந்த வரத்தைக் தக்க வகையில் பயன்படுத்தவில்லை என்பதே, 1 கொரிந்தியர் 14ஐ எழுதுவதில் பவுலின் கவலையாக இருந்தது. இதன் விளைவாக அவர், அந்த வரம் எவ்வாறு செயல்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றிக் குறிப்பான அறிவுரைத்துதல்களைக் கொடுத்தார். மொழிகளில் பேசுபவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பின்வரும் விதிகளைப் பவுல் அமைத்தார்:

1. *சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது* (14:5, 12, 17, 19, 26). அந்த நிபந்தனை இன்னொன்றிற்கு வழிநடத்துகிறது: கூறப்பட்ட ஒவ்வொரு விஷயமும் கேட்பவர்களுக்குக் கருத்தை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டியிருந்தது. பக்திவிருத்தி ஊட்டுதலுக்கு புரிந்து கொள்ளுதல் தேவைப்படுகிறது. இன்றைய நாட்களில் மார்க்கரீதியான சபைகூடுகைகளில் மொழிகளில் பேசுதல் பக்திவிருத்தி ஊட்டுகிறதா? மொழிகளில் பேசுதல் என்பது ஒருவேளை மன எழுச்சி ஊட்டுவதாக அல்லது உணர்வுப்பூர்வமானதாயிருக்கலாம், ஆனால் அது பக்திவிருத்தி ஊட்டுகிறதா? கூறப்பட்டதில் அர்த்தம் நிறைந்தது எதுவும் இல்லை என்றால், அதை பக்திவிருத்தி ஊட்டுவதாகப் பவுல் கருதமாட்டார்.
2. *சபைகூடுகையில் ஒரு நேரத்தில், இருவர் அல்லது மூவர், ஒருவர் பின் ஒருவராக மொழிகளில் பேசலாம், அதுவும் வியாக்கியானம் அளிப்பவர் இருந்தால் மாத்திரமே அவ்வாறு பேசலாம்* (14:27, 28). இன்றைய நாட்களில் மொழிகளில் பேசுவதாக உரிமைகோருபவர்கள் இந்த அறிவுறுத்துதல்களைப் பின்பற்றுகின்றனரா? குறிப்பாக "அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், [மொழிகளில் பேசபவர்] சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்" என்ற பவுலின் வார்த்தைகள் (14:28அ) கீழ்ப்படியப்படுவதைக் காட்டிலும் அதிகமாக அடிக்கடி புறக்கணிக்கப்படுகின்றன. மொழிகளில் பேசுவதை விளக்கப்படுத்துவதற்கு சபைகூடுகையில் யாரும் இல்லை என்றால், எவரொருவரும் மொழிகளில் பேசக்கூடாது என்பதே விதியாக உள்ளது.
3. *சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்* (14:34, 35). இன்றைய நாட்களில் மொழிகளில் பேசுதல் நடைமுறைப்படும் சபைகளில் பெரும்பான்மையானவற்றில், பெண்கள் மொழிகளில் பேசுகின்றனர் அல்லது வேறு வகையில் சபைகூடுகைகளை வழிநடத்துகின்றனர்.
4. *சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது* (14:40). மக்கள் மொழிகளில் பேசும்போது, அவர்களின் ஆராதனை ஊழியங்கள்

முறையானதற்கு மாறாக குழப்பமானதாகத் தோன்றுகிறது.

இன்றைய நாட்களில் "glossolalia" வை நடைமுறைப்படுத்துகிறவர்கள், மொழிகளில் பேசுவதற்கு வேதவசனங்களில் தரப்பட்டுள்ள அறிவுறுத்துதல்களைப் பொதுவாகப் பின்பற்றுவதில்லை.

*சமமாக மதிக்கப்படுவதில்லை.* புதிய ஏற்பாட்டில் மொழிகளில் பேசுவதற்கும் இன்றைய நாட்களில் மொழிகளில் பேசுவதற்கு இடையிலான மாபெரும் வேறுபாடு என்பது, வரத்தின்மீது வைக்கப்படும் மதிப்புடன் தொடர்புபடுகிறது. மொழிகளில் பேசுதல் என்பது வரங்களில் மிகச்சிறந்ததாக இருக்கவில்லை (இது மிகச்சிறந்தது என்று கொரிந்தியர் நினைத்தனர் என்பது உறுதி) ஆனால் இது வரங்களில் மிகச்சிறிதானதாக இருந்தது என்று கொரிந்தியர்களுக்குக் காண்பித்தல் என்பதே, 1 கொரிந்தியர் 14ல் பவுலின் இலக்காக இருந்தது. மொழிகளில் பேசுதல் என்பது தன்னில்தானே சபைக்கு பக்திவிருத்தி ஊட்ட இயலாதிருந்தது. இதற்கு நேர்மாறாக, இன்றைய நாட்களில் பாஷைகளில் பேசுகிறவர்கள் மத்தியில், சிலவேளைகளில் அந்த வரமானது உண்மைக் கிறிஸ்தவரின் அடையாளமாக நினைக்கப்படுகிறது. எழுப்புதல் கூட்டத்தில் இருந்துகொண்டு, மொழிகளில் பேசாதவரான உறுப்பினர் ஒருவர், ஆவிக்குரிய தன்மையில் குறைவுபடுவதாக நினைக்கப்படுகிறார். இந்தக் கண்ணோட்டத்தை, மொழிகளில் பேசுதல் பற்றிய பவுலின் கருத்தில் இருந்து ஒரு பெரிய வேறுபாடு பிரித்து வைக்கிறது.

**இன்றைய நாட்களில் "மொழிகளில் பேசுதல்" என்பது தேவனுடைய வல்லமையினால் நடைமுறைப்படுகிறதா?**

இரண்டாவதாக, இன்றைய நாட்களில் மொழிகளில் பேசுதல் என்பது தேவனுடைய வல்லமையால் நடைபெறுகிறதா இல்லையா என்று நாம் கேட்க வேண்டும்.

*மொழிகளில் பேசுதல் என்ற புதிய ஏற்பாட்டின் வரம் போன்றது அல்ல.* இன்றைய நாட்களில் "மொழிகளில் பேசுதல்" என்று அங்கீகரிக்கப்படுபவற்றில் அதிகமானவை, வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில் மொழிகளில் பேசுதல் கொண்டிருந்த பண்புகளைப் பெற்றிருப்பது இல்லை, இன்றைய நாட்களில் இந்தச் செயலில் ஈடுபடுபவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் அதைச் செய்கின்றனரா என்பது சந்தேகத்திற்கு உரியதாக உள்ளது. இன்றைய நாட்களில் மொழிகளில் பேசுதலுக்குத் தேவன் ஆதாரமூலமாக இருப்பார் என்றால், அது புதிய ஏற்பாட்டில் மொழிகளில் பேசுதலில் இருந்து வேறுபடக்கூடாது.

*இன்றைய நாட்களில் மற்ற அற்புதங்களுடன் நடப்பதில்லை.* மற்றும் இன்றைய நாட்களில் தேவனுடைய வல்லமையினால் மொழிகளில் பேசுதல் பற்றி நாம் சந்தேகப்பட வேண்டும், ஏனெனில் மொழிகளில் பேசுதல் என்பது ஒரு மொத்தத்தின் பகுதியாக - முதல் நூற்றாண்டில் பரிசுத்த ஆவியானவரால் நடப்பிக்கப்பட்ட வரங்களின் பல்வேறு வகைகளில் ஒரு பகுதியாக - இருந்தது. இன்றைய நாட்களில் அப்படிப்பட்ட அற்புதங்கள் எதுவும் நடைபெறுவதில்லை. தேவன் முதல் நூற்றாண்டில் சிலரை மொழிகளில் பேசச் செய்தது போன்று இன்றும் பேசச் செய்வார் என்றால், அவர் அன்று சிலருக்கு மரித்தோரை உயிர்ப்பிக்க வல்லமை கொடுத்தது போன்று இன்றும் கொடுக்க வேண்டுமே (காண்க நடபடிகள் 9:36-43). அவர் மரித்தோரை உயிர்ப்பிப்பது இல்லை

*என்றால், மக்கள் அந்நிய மொழிகளில் பேசவும் அவர் காரணமாவதில்லை.*

*இப்படிப்பட்ட வரங்கள் ஒழிந்து போகும் காலம் வரும் என்று 1 கொரிந்தியர் 13ல் பவுல் போதித்தார். குறிப்பாக அவர், "அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம்" என்று கூறினார் (13:8). அது எப்போது நடக்கும்? "நிறைவானது" (teleios) வரும்போது முதல் நூற்றாண்டின் அற்புத வரங்கள் ஒழிந்து போகும் என்று பவுல் கூறினார் (13:10). "நிறைவானது" என்பது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிப்பதில்லை, ஏனெனில் இவ்வார்த்தை பொதுப்பாலாக உள்ளது. பவுல் "நிறைவான விஷயத்தை" பற்றிப் பேசினார். அப்படியென்றால் அது என்ன? சந்தர்ப்பப் பொருளுடன் வைத்துப் பார்க்கும்போது, பவுல் சபையின் பக்குவத்தன்மை பற்றிப் பேசினார். சபையானது பக்குவம் அடையும்போது, அற்புத வரங்கள் ஒழிந்து போகும். தேவனுடைய வெளிப்படுத்துதல் நிறைவடைந்து சபை பூரண வளர்ச்சி பெற்றுக்கொண்ட வேளையில் - [அந்நிய] மொழிகளில் பேசுதல் உட்பட - அற்புத வரங்கள் இனியும் அவசியமாயிருப்பதில்லை. ஆகையால் அவைகள் ஒழிந்து போயின.*

*மக்கள் தேவனுடைய வல்லமையினால் அந்நிய மொழியில் பேசுவதில்லை என்றால், அந்தச் செயலுக்குப் பின்னால் இருப்பது என்ன? அந்நிய மொழியில் பேசுதல் என்பது உயர்ந்த உணர்வு நிலைக் குழுச் சூழ்நிலையில் இருக்கும்போது மக்கள் ஈடுபடும் கற்றறிந்த நடக்கையாக உள்ளது. அவர்கள் அந்த செயல்மூலமாக, ஆவிக்குரிய பலன்களையும் சமூக அங்கீகாரத்தையும் ஆதாயமாகப் பெறுவதாக நினைக்கின்றனர். அவர்கள் அந்நிய மொழியில் பேசும்போது, அவ்வாறு செய்வதற்கு தங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ள சக்திகளினால் தாங்கள் இயக்கப்படுவதாக உணரலாம்; ஆனால் அது, தேவன் அவர்களை ஏவுகிறார் என்பதை நிரூபிப்பதில்லை. வரலாறு முழுவதிலும் மக்கள், தங்கள் கடவுள்களால் அசைக்கப்பட்டதாக உணரும் காரணத்தினால், பகுத்தறிவற்ற நடக்கையில் ஈடுபட்டுள்ளனர். இந்த அனுபவங்கள், அவர்களின் நடக்கைக்குப் பின்னால் கர்த்தராகிய தேவன் இருந்தார் என்று நிரூபிக்காதது போலவே, அந்நிய மொழிகளில் பேசுபவரின் ஆவிக்குரிய பரவசநிலை, அவர் தேவனுடைய வல்லமையினால் பேசியுள்ளார் என்று நிரூபிப்பதில்லை.*

## *நாம் "அந்நிய மொழிகளில்" பேசினால் அது ஏற்படுத்தும் வேறுபாடு என்ன?*

*இன்னமும் ஒருவர், "இன்றைய நாட்களில் நாம் அந்நிய மொழிகளில் பேசினால் அது பொருட்படுத்தப்படுமா? அது தவறானதா அல்லது துன்பம் நிறைந்ததா?" என்று கேட்கலாம். உண்மையில், அந்நிய மொழிகளில் பேசுவதை செயல்படுத்தும் ஒரு நபர் அல்லது சபை, பல காரணங்களினால் தவறாயிருக்கலாம். (1) அவர்கள் அப்படிப்பட்ட ஒரு அனுபவத்தின்மீது வேதவசன ரீதியற்ற மதிப்பை வைக்கலாம். அந்நிய மொழிகளில் பேசுவதைப் பவுல் கீழ்மைப்படுத்தி இருக்கையில், அவர்கள் அதை மேலாக்கியிருக்கலாம். (2) அந்த செயலில் அவர்கள் தேவனுடைய விதிகளைப் பின்பற்றாமல் இருக்கலாம், இதன் விளைவாக அவர்களின் ஆராதனை ஊழியங்கள் குழப்பமானவையாகவும் பக்திவிருத்தி அற்றவையாகவும் ஆகலாம். (3) ஒருவேளை அந்நிய மொழிகளில் பேசுபவர்கள்*

வழக்கமாக, அந்த அனுபவத்தைப் பற்றிய தங்கள் உணர்வுகளே மார்க்கத்தில் தங்கள்மீது நிறைவான அதிகாரம் கொண்டதாகும்படி செய்கின்றனர் - அது மிகவும் அபாயகரமான நிலைப்பாடாக உள்ளது.

## முடிவுரை

வேதாகமம் போதிப்பது என்ன என்பதற்குச் சாட்சியங்களை ஆராய்ந்து பார்ப்பதும் அதை ஏற்றுக்கொள்ளத் தீர்மானிப்பதுமே மனச்சாட்சியுள்ள கிறிஸ்தவர் செய்யக்கூடிய மிகச்சிறந்த செயலாக உள்ளது. அந்நிய மொழிகளில் பேசுதல் தேவனிடத்தில் இருந்து வருகிறது மற்றும் அது எல்லா யுகங்களிலும் சபையில் இருப்பதை நோக்கங் கொண்டுள்ளது என்றால், அதை (நம்மால் முடிந்தது என்றால்) நாம் செயல்படுத்தலாம்! அந்நிய மொழிகளில் பேசுதல் தேவனிடத்தில் இருந்து வரவில்லை மற்றும் அது காலத்தின் முடிவு வரையிலும் கிறிஸ்தவர்களுக்கானதாக இருப்பதில்லை என்றால், நாம் அதை செயல்படுத்தாமல் இருப்போமாக!

நாம் அந்நிய மொழிகளில் பேசுவதில்லை என்றால், அது நமது மார்க்கம் மரித்துப்போகும் மற்றும் மந்தமாகும் என்று அர்த்தப்படுத்துகிறதா? இல்லவே இல்லை. கர்த்தருடைய சபையில் உபதேசம் மற்றும் ஆராதனைக்கு வேதாகமத்தில் காணப்படும் வடிவமைப்பு நமது ஆவிகளை எழுப்பி நமது ஆத்துமாக்களுக்கு வலிவூட்ட வேண்டும். தேவனை ஆராதிப்பதும் சேவிப்பதும் நமது வாழ்வில் மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் கொண்டுவர வேண்டும் மற்றும் அது சில வேளைகளில் தேவனை மகிழ்வுடன் துதிப்பதில் நாம் உற்சாகம் கொள்ளக் காரணமாக வேண்டும். உயிருள்ள, உயிர்த்துடிப்பு உள்ள ஆவிக்குரிய விசுவாசத்தை மகிழ்வுடன் அனுபவிப்பதற்கு நாம் அந்நிய மொழிகளில் பேசுதலை நம்பியிருக்கவோ அல்லது அதை நடைமுறைப்படுத்தவோ தேவையில்லை.

---

குறிப்புகள்

[1]Charismata என்பது - 12:4ல் உள்ளது போன்று "வரங்கள்" என்பதற்கான வார்த்தையாக உள்ளது. [2]இந்த மக்கள் வித்தியாசப்பட்ட இடங்களில் இருந்து வந்திருந்தாலும், அவர்கள் ஒருவர் மற்றவருடன் உரையாட முடிந்தது. அந்த நாட்களில் உலகளாவிய மொழியாக இருந்த கிரேக்க மொழியில் உரையாடினர் என்பதில் சந்தேகம் இல்லை, மற்றும் அவர்கள் தாங்கள் உரையாடிய மொழியில் இருந்து தங்கள் சொந்த மொழிகளை வேறுபடுத்திக் கண்டனர். அதுபோன்றே, இன்றைய நாட்களில் மக்களின் பலர் ஒரு தாய்மொழியை அல்லது ஒரு வட்டார வழக்கு மொழியைக் கொண்டுள்ளனர், ஆனால் அவர்கள் ஆங்கிலம் போன்ற பரவலாக அறியப்பட்ட மொழியையும் பேசுகின்றனர். [3]பேசுதலிலா அல்லது கேட்டதிலா, எதில் அற்புதம் இருந்தது என்பது பற்றி வேதாகம மாணவர்கள் விவாதம் செய்துள்ளனர். அப்போஸ்தலர்கள் மற்ற மொழிகளில் பேசினார்களா அல்லது சொந்த மொழிகளில் கேட்கும்படி தேவன் செய்தாரா? இதற்கு வேதவசனம் தன்னிலேயே பதில் அளிக்கிறது: அவர்கள் "வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்" (அல்லது "மொழிகளில்"; நடபடிகள் 2:4; CEV). கேட்குதலில் அல்ல ஆனால் பேசுதலிலேயே அற்புதம் இருந்தது.